**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8213059

1. District : மாவட்டம் திருச்சி | PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு | Year: ஆண்டு 2024 | FIR No.: மு.த.அ. எண் 03 | Date: நாள் 28.2.24

2. (i) Act சட்டம்: IPC — Sections பிரிவுகள்: 120(B), 167, 406, 409, 465, 468, 471, 477(A),
   (ii) Act சட்டம்: PC Act — Sections பிரிவுகள்: 420 IPC r/w 13(1)(c) PC Act 1988 r/w 109 IPC and 13(1)(a) and 12 of Prevention of Corruption Act 1988 (as amended in 2018)
   (iii) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 (as amended in 2018) — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 2016 | Time to : நேரம் வரை 2019
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28.02.24 | Time : நேரம் 16.00 Hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக
   முதற்கட்ட விசாரணை அறிக்கையின் அடிப்படையில் தன்னியல்பில் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி கூத்தப்பார் பேரூராட்சி அலுவலகம், திருவெறும்பூர் வட்டம், திருச்சி மாவட்டம். சுமார் 15 வட கிழக்கு.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tmt. F. சேவியர்ராணி | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பிரான்சிஸ்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 11.05.1969 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் காவல் ஆய்வாளர் | (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   முதற்கட்ட விசாரணையின் மூலம் கண்டறியப்பட்டது.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed R. A. Prasanna Venkatesh Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS V&AC, Trichy. on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

28/02/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 28.02.2024
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 16.00 Hrs

Name: பெயர் F. Xavier Rani
Rank: நிலை Inspector of Police No. எண்
V&AC, Trichy.

திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.3/2024 முதல் தகவல் அறிக்கையின் காலம் 7–ன்படியான எதிரிகளின் பட்டியல்

எதிரிகள்

1) திரு.சிவக்குமாரன்(த.ப.நீ), த/பெ பெரியசாமி, அலுவலக உதவியாளர், கூத்தப்பார் பேரூராட்சி, திருவெறும்பூர் வட்டம், திருச்சிராப்பள்ளி.
2) திரு.சீ.கருணாநிதி, த/பெ. சீரங்கன், முன்னாள் தணிக்கை ஆய்வாளர், உள்ளாட்சி நிதி தணிக்கைதுறை, திருச்சிராப்பள்ளி.
3) திரு.துரைராஜ்(த.ப.நீ), த/பெ. குழந்தைவேல் பிள்ளை, இளநிலை உதவியாளர், கூத்தப்பார் பேரூராட்சி, திருவெறும்பூர் வட்டம், திருச்சிராப்பள்ளி.
4) திரு.ரா.வெங்கடாசலம், த/பெ ராமையா, பாரதிபுரம், 1ஆம் தெரு, கூத்தப்பர், திருவெறும்பூர், திருச்சி(ஸ்ரீகாளீஸ்வரர் ஆண்கள் சுய உதவிக்குழு உறுப்பினர், கூத்தப்பர், திருச்சி).
5) திரு.P.மகுடேஸ்வரன், த/பெ பெரியசாமி, எண்.216, மேல கணபதி நகர், கைலாசபுரம், திருவெறும்பூர், திருச்சி(ஸ்ரீகாளீஸ்வரர் ஆண்கள் சுய உதவிக்குழு உறுப்பினர், கூத்தப்பர், திருச்சி).
6) திரு.க.கார்த்திக், த/பெ கணேசன், ஜோசப் கிருஷ்ணன் தெரு, அரியமங்களம், திருச்சி(ஸ்ரீகாளீஸ்வரர் ஆண்கள் சுய உதவிக்குழு உறுப்பினர், கூத்தப்பர், திருச்சி).
7) திருமதி.ம.துர்காதேவி, க/பெ மகுடேஸ்வான், எண்.216, மேல கணபதி நகர், கைலாசபுரம், திருவெறும்பூர், திருச்சி.
8) திருமதி.கா.விஜயலெட்சுமி, க/பெ கார்த்திக், ஜோசப் கிருஷ்ணன் தெரு, அரியமங்களம், திருச்சி.
9) திரு.பா.ராமராஜ், த/பெ பாலசுப்ரமணியன், 22/8,நடுத்தெரு, கூத்தப்பர், திருவெறும்பூர், திருச்சி (ஸ்ரீகாளீஸ்வரர் ஆண்கள் சுய உதவிக்குழு உறுப்பினர், கூத்தப்பர், திருச்சி).
10) திரு.கலைச்செல்வன், த/பெ ரெங்கசாமி, 38,வடக்குதெரு, கூத்தப்பர், திருவெறும்பூர், திருச்சி(ஸ்ரீகாளீஸ்வரர் ஆண்கள் சுய உதவிக்குழு உறுப்பினர், கூத்தப்பர், திருச்சி).

**திருச்சி ஊ.த.க. பிரிவு கு.எண். 3/2024-ன் முதல் தகவல் அறிக்கை காலம் 12-ன் தொடர்ச்சி.......**

**திருச்சி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்ற, சிறப்பு நீதிபதி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் விசாரணை அறிக்கை எண். 046/TP/2023, Dt.17.10.2023 படியும், சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக நமுனா எண். PE 85/2019/TP/TR, Dt.17.11.2023-ன்படியும், எதிரிகள் 1 முதல் 3 வரையிலான நபர்கள் ஊழல் தடுப்புச்சட்டம் 1988 பிரிவு 2(c)ன்படி பொது ஊழியர் ஆவார்கள். திருச்சி மாவட்டம் திருவெறும்பூர், எண்.1, கைலாசபுரத்தைச் சேர்ந்த என்.ராஜேஷ் என்பவர் சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை அலுவலருக்கு அனுப்பிய புகார் மனுவின் அடிப்படையில், விசாரணை மேற்கொண்டதில் மேற்கண்ட திரு.ராஜேஷ் என்று குறிப்பிட்டுள்ள பெயர் மற்றும் முகவரி போலியானது என்பதும், ஆனால் புகாரில் குறிப்பிட்டுள்ளதன்படியும், மாவட்ட ஆட்சித்தலைவர் திருச்சிராப்பள்ளி அவர்களின் கடித எண்.Lr.No.918/2019/TP2,dt.18/11/2019-படி விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதன் படியும் திரு.த.நாராயணமூர்த்தி முன்னாள் செயல் அலுவலர் (தபநீ) என்பவர், கூத்தப்பார் பேரூராட்சியில் பணிபுரிந்த 19.02.2016 முதல் 06.03.2019 முற்பகல் வரையிலான தனியர் பணிக்காலம் தொடர்பான நிதி செலவினங்கள்/பயன்பாடு மற்றும் இதர தொடர்புடைய இனங்கள் குறித்து விரிவாக ஆய்வு செய்து தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள திருச்சிராப்பள்ளி, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அனுப்பிய கடிதத்தின்படி துவக்ககட்ட விசாரணை மேற்கொண்டதில் எதிரி திரு.நாராயணமூர்த்தி, கடந்த 25.05.2023 அன்று இறந்துவிட்டார். மேற்படி, எதிரி கூத்தப்பார் பேரூராட்சியில் செயல் அலுவலராக 2016 முதல் 2019ஆம் ஆண்டு வரையில் பணிபுரிந்த போது சில முறைகேடுகள் மற்றும் அரசு தொகை கையாடல் நடைபெற்றுள்ளது தெரியவருகிறது.

திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் வட்டம், கூத்தப்பார் பேரூராட்சியில் திரு.நாராயணமூர்த்தி(Expired), செயல் அலுவலர் நிலை-1 ஆக பணியில் இருந்தபோது எதிரி-1 திரு.சிவக்குமாரன், அலுவலக உதவியாளராகவும், எதிரி-3 துரைராஜ், இளநிலை உதவியாளராகவும் பணிபுரிந்துள்ளார். தனிநபர்களான 4 முதல் 10 வரையிலான நபர்கள் மேற்கண்ட பேரூராட்சியில் ஆண்கள் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் என்ற பெயரில் பணியில் இருந்தவர்கள், செயல் அலுவலர் திரு.நாராயணமூர்த்தியின் கட்டுப்பாட்டின் கீழ் பணியாற்றியுள்ளார்கள். மார்ஜினில் கண்ட எதிரி-2 திரு.கருணாநிதி மேற்கண்ட பேரூராட்சியினை 2016 -2017ம் ஆண்டு தணிக்கை செய்துள்ளார்.

மேற்படி செயல் அலுவலர் திரு.நாராயணமூர்த்தியுடன்(Expired) கூட்டு சேர்ந்து மார்ஜினில் கண்ட எதிரிகள் 1 முதல் 10 வரையிலானவர்கள் பின்வரும் முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளனர். அவைகள்:

**2016 முதல் 2019 வரையில் பொது நிதியை கையாடல் செய்துள்ளது தொடர்பான முறைகேடு**

திருச்சி மாவட்டம், கூத்தப்பார் பேரூராட்சியில் செயல் அலுவலராக திரு.நாராயணமூர்த்தி, எதிரி–1 திரு.சிவக்குமாரன் மற்றும் ஸ்ரீ காளிஸ்வரர் ஆண்கள் சுயஉதவிக்குழுவில் பணிபுரிந்த ஒப்பந்ததாரர்கள் அல்லாத எதிரிகள் 4 முதல் 10 வரையிலானவர்களை ஒப்பந்ததாரர்கள் என்ற பெயரில் முட்புதர்கள் அகற்றியது, இடிந்த சாக்கடைகள் சரிசெய்தது, புதிய சாக்கடைகள் கட்டியது என மேற்கண்ட பணிகளுக்கு ரூ.10,000/– மதிப்பீட்டிற்குள் (ரூ.9900/–, ரூ.9800/–, ரூ.9500/–) போலியான விலைபுள்ளிகள் மூலம் குறைந்த விலைபுள்ளி கோரிய நபருக்கு மேற்கண்ட பணிகள் மேற்கொண்டதாக போலியான ரசீதுகளை எதிரி–9 ராமராஜ் என்பவர் மூலம் அலுவலக கணினியில் தயார் செய்து, அதன்மூலம் செலவினச் சீட்டுகள் எழுதி, பணிகள் நடைபெறாமலேயே தொகை எடுக்கப்பட்டு, ரூ.1,71,32,340/–ற்கு பணிகள் நடைபெற்றதாக திரு.நாராயணமூர்த்தி(Expired), எதிரி–1 சிவக்குமாரன் அலுவலக உதவியாளர் மற்றும் எதிரிகள் 4 முதல் 8 வரையிலான நபர்கள் கூட்டு சேர்ந்து அரசு நிதியினை கையாடல் செய்துள்ளார்கள்.

2016–17ம் ஆண்டில் திரு.நாராயணமூர்த்தி(Expired)கூத்தப்பார் பேரூராட்சியில் வார்டு எண்.1, கீழத்தெரு, வார்டு எண்.2 பார்வெட்டித்தெரு, கல்லுகொல்லை அரிஜனத்தெரு, பாரதிபுரம் 4 வது தெரு ஆகிய இடங்களில் வடிகால் சாக்கடை புதியதாக கட்டுவதற்கு எவ்வித தீர்மானமும் நிறைவேற்றாமல் டெண்டர் கோராமல் உதவி பொறியாளரின் தோராய மதிப்பீட்டை பெறாமலும், அளவீட்டு புத்தகமின்றியும், மேற்கண்ட தெருக்களில் பணிகள் மேற்கொள்ளாமலேயே, மேற்கண்ட எதிரிகள் 4 மற்றும் 10 ஆகியோரை கொண்டும், மணிகண்டன் என்ற ஒப்பந்ததாரரை கொண்டும், பணிகள் ரூ.9,79,418/– மதிப்பீட்டில் நடைபெற்றதாக பொய்யான ஆவணங்கள் மூலம் திரு.நாராயணமூர்த்தி(Expired), எதிரி–1 சிவக்குமாரன் அலுவலக உதவியாளர் மற்றும் எதிரிகள் 5 மற்றும் 9 ஆகியோருடன் கூட்டு சேர்ந்து அரசு நிதியினை கையாடல் செய்துள்ளார்கள்.

**2016–19ம் ஆண்டில் கூத்தப்பார் பேரூராட்சிக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை கொள்முதல் செய்தது தொடர்பான முறைகேடு**

2016–2019ம் ஆண்டில் அரசு சூப்பர் ஸ்டோர்ஸ், வினாயக டிரேடர்ஸ், வாசவி டிரேடர்ஸ், ஸ்ரீ வாசவி டிரேடர்ஸ், ஸ்ரீ மணிஷ் என்டர்பிரைசஸ், ஸ்ரீ வினாயகா டிரேடர்ஸ் ஆகிய நிறுவனங்களில் தளவாட சாமான்கள், எலக்ட்ரிக் பொருட்கள், சுகாதார பொருட்கள், குடிநீர் உதிரி பாகங்கள் ஆகியவற்றினை கொள்முதல் செய்யும் பொழுது, மன்றத்தில் ஒப்புதல்

பெறாமலும், தீர்மானம் நிறைவேற்றாமலும், கொள்முதல் குழு அங்கீகரித்த நிறுவனத்தில் பொருட்களை கொள்முதல் செய்யாமலும், பேரூராட்சியில் அனுமதி பெறாமலும், அவ்வாறு பெறப்பட்ட பொருட்கள் குறித்து உதவி இயக்குநரின் பின்னேற்பு பெறாமலும், ஒவ்வொரு பொருட்களையும் தரச்சான்று உள்ள பொருட்களை கொள்முதல் செய்யாமலும், பேரிடர் காலங்களில் பொருட்களை அத்தியாவசிய தேவைக்கு அருகில் உள்ள கடைகளில் கொள்முதல் செய்து வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றாமலும், ரூ.3,34,08,225/–ற்கு திரு.நாராயணமூர்த்தியால்(Expired) நிதியிழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதும், 2018–2019ம் ஆண்டில் திரு.நாராணயமூர்த்தி(Expired)அவர்களால் ரத்து செய்யப்பட்ட காசோலை மூலம் காசாக்கம் செய்யப்பட்டும், பேரூராட்சியில் பணிகள் செய்த நபருக்கு தொகை வழங்காமல் வேறு நபருக்கு காசோலை வழங்கியது மூலமும், பணிகள் செய்ததில் பட்டியலில் குறிப்பிட்டுள்ள தொகையை விட கூடுதலாக தொகை வழங்கியதன் மூலமும் ரூ.2,14,400/–க்கு அரசுக்கு நிதியிழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**2016–17ம் ஆண்டில் கூத்தப்பார் பேரூராட்சியில் எதிரி–2 திரு.கருணாநிதி அவர்களால் தணிக்கை மேற்கொண்டது தொடர்பான முறைகேடு**

கூத்தப்பார் பேரூராட்சியில் 2016–2017ம் ஆண்டில் எதிரி–2 திரு.கருணாநிதி, தணிக்கை ஆய்வாளர் தணிக்கையின்போது எதிரி–6 திரு.கார்த்திக் பெயரில் உள்ள வவுச்சர் எண்.990, எதிரி–10 திரு.கலைச்செல்வன் பெயரில் உள்ள வவுச்சர் எண்.991, 1074, 1187 மற்றும் ஒப்பந்ததாரர் திரு.மணிகண்டன் பெயரில் வவுச்சர் எண்.1151 ஆகியவற்றின் மூலம் ரூ.9,79,418/–க்கு பணிகள் மேற்கொண்டதற்கான கோப்பில் உதவி பொறியாளரின் மதிப்பீடு மற்றும் அளவீட்டு புத்தகம், செலவுசீட்டுகள் இல்லாதது குறித்து 2016–17 ஆம் ஆண்டு தணிக்கையில் மேற்கோள்காட்டாமலும், அதற்குரிய ஆவணங்களை பார்வையிடாமலும் இருந்து தணிக்கையின்போது சுயஉதவிகுழு உறுப்பினர்கள் மூலம் பணிகள் மேற்கொண்டது குறித்து எவ்வித குறைபாட்டையும் தெரிவிக்காமல் இருந்து ரூ.9,79,418/–ற்கு கையாடல் செய்துள்ளதை மறைத்துள்ளார்.

மேலும், கூத்தப்பார் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்த எதிரி–3 திரு.துரைராஜ் அலுவலக ஆவணங்களை சரிவர பராமரிக்காமலும், இளநிலை உதவியாளருக்கான பணியினை செய்யாமலும் மேற்கண்ட குற்றச்சாட்டில் குறிப்பிட்டுள்ள நிதியிழப்பிற்கு உடந்தையாக இருந்துள்ளார்.

திருச்சி மாவட்டம், கூத்தப்பார் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்த நாராயணமூர்த்தி(Expired), எதிரி–1 சிவக்குமாரன், எதிரி–3 துரைராஜ் மற்றும் ஸ்ரீகாளீஸ்வரர் ஆண்கள் சுய உதவி குழு உறுப்பினர்களான எதிரிகள் 4 முதல் 10 வரையிலானவர்கள் கூட்டு சேர்ந்து 2016–19ஆம் ஆண்டுகளில் பேரூராட்சியின் பொது நிதி (ரூ.1,71,32,340/– +

ரூ.979418/–) ரூ.1,81,11,758/– கையாடல் செய்யப்பட்டுள்ளதும், 2016–19 ஆம் ஆண்டில் கொள்முதல் குழு அங்கீகரித்த நிறுவனங்களில் கொள்முதல் செய்யாமலும், அரசு வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றாமலும், ரூ.3,34,08,225/–ற்கு திரு.நாராயணமூர்த்தியால்(Expired) நிதியிழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதும், ரத்து செய்யப்பட்ட காசோலை மூலம் பணிகள் செய்த நபருக்கு தொகை வழங்காமல் வேறு நபருக்கு காசோலை வழங்கியது மூலமும், பணிகள் செய்ததில் பட்டியலில் குறிப்பிட்டுள்ள தொகையை விட கூடுதலாக தொகை ரூ.2,14,400/–ற்கு நிதியிழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதும், மேற்கண்ட பேரூராட்சியில் 2016–17ம் ஆண்டில் எதிரி–2 திரு.கருணாநிதி, தணிக்கை ஆய்வாளர் தணிக்கையின்போது ரூ.9,79,418/–க்கு பணிகள் மேற்கொண்டதற்கான கோப்பில் உதவி பொறியாளரின் மதிப்பீடு மற்றும் அளவீட்டு புத்தகம், செலவுசீட்டுகள் இல்லாதது குறித்து 2016–17 ஆம் ஆண்டு தணிக்கையில் மேற்கோள்காட்டாமலும், அதற்குரிய ஆவணங்களை பார்வையிடாமலும் இருந்து தணிக்கையின்போது சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் பணிகள் மேற்கொண்டுள்ளதை சட்ட விரோதமான, உள்நோக்கத்துடன் எவ்வித குறைபாட்டையும் தெரிவிக்காமல் இருந்துள்ளார் என்பது துவக்கக்கட்ட விசாரணையின் மூலம் தெரியவருகிறது.

ஆகவே, குற்றமுறு முறைகேடுகள், அரசு தொகை கையாடல்கள், குற்றமுறு நம்பிக்கை மோசடி, குற்றமுறு உடந்தை மற்றும் ஆவணங்களை பொய்யாக புனைதல் போன்ற செயல்களில் ஈடுபட்ட எதிரிகள் 1 முதல் 10 வரையிலானவர்கள் மீது திருச்சி ஊ.த.க. பிரிவு கு.எண். 3/2024 U/s 120(B), 167, 406, 409, 465, 468, 471, 477(A), 420 IPC & 13(1)(c) Prevention of Corruption Act 1988 r/w 109 IPC and 13(1)(a) and 12 of Prevention of Corruption Act 1988 as amended in 2018)–ன்படி என்னால் 28.02.2024 ஆம் தேதி 16.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

இந்த முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம் திருச்சி அவர்களுக்கும் மற்றும் அதன் நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டது.

28/02/24
(F. Xavier Rani)
Inspr. of Police,
V&AC, Trichy.